சாராம்சம்: இனிய குழந்தைகளே, இப்பொழுது இது ஏறும் ஸ்திதிக்கான காலமாகும். பாரதம் ஏழ்மையில் இருந்து செல்வம் மிக்கதாக ஆகுகின்றது. உங்களின் ஆஸ்தியான சத்தியயுக இராச்சியத்தைத் தந்தையிடம் இருந்து கோருங்கள்.

கேள்வி: தந்தையின் எப்பட்டங்களை ஸ்ரீகிருஷ்ணருக்கு வழங்க முடியாது?

பதில்: தந்தையே ஏழைகளின் பிரபு. ஸ்ரீகிருஷ்ணரை இவ்வாறு அழைக்க முடியாது. அவர் மிகவும் செல்வந்தர், அவருடைய இராச்சியத்திலுள்ள அனைவரும் செல்வந்தர்களே. தந்தை வரும்பொழுது, பாரதமே அனைத்திலும் ஏழை நாடாக இருக்கின்றது. அவர் பாரதத்தைச் செல்வம் மிக்கதாக ஆக்குகின்றார். உங்களின் பாரதம் சுவர்க்கமாக இருந்ததாக நீங்கள் கூறுகின்றீர்கள், ஆனால் அது இப்பொழுது அவ்வாறில்லை. அது மீண்டும் ஒருமுறை அவ்வாறு ஆகும். ஏழைகளின் பிரபுவாகிய பாபா மாத்திரமே பாரதத்தைச் சுவர்க்கமாக ஆக்குகின்றார்.

பாடல்: இறுதியில் நாங்கள் காத்திருந்த அந்த நாளும் வந்துவிட்டது.

ஓம்சாந்தி. இனிமையிலும் இனிமையான ஆன்மீகக் குழந்தைகளாகிய நீங்கள் இப்பாடலைக் கேட்டீர்கள். ஆத்மாக்கள் மறைமுகமானவர்கள், சரீரங்கள் கண்களுக்குப் புலப்படக் கூடியவை. ஆத்மாக்களை இக்கண்களால் பார்க்க முடியாது; அவர்கள் மறைமுகமானவர்கள். அவர்கள் நிச்சயமாக இருக்கின்றனர், ஆனால் சரீரங்களால் மூடப்பட்டிருக்கின்றனர். இதனாலேயே ஆத்மாக்கள் மறைமுகமானவர்கள் எனக் கூறப்படுகின்றது. ஆத்மாவே கூறுகின்றார்: நான் அசரீரியானவர். நான் இங்கு சரீரத்தினுள் வந்து, மறைமுகமானவர் ஆகுகின்றேன். ஆத்மாக்கள் அசரீரி உலகிற்குச் சொந்தமானவர்கள். அங்கு மறைமுகமாக இருத்தல் என்ற கேள்விக்கே இடமில்லை. பரமாத்மா பரமதந்தையும் அங்கேயே வசிக்கின்றார். அவர் பரமன் எனப்படுகின்றார். அவரே முழுமையாக அப்பால் வசிக்கின்ற, அதிமேலான ஆத்மாவான பரமாத்மா ஆவார். தந்தை கூறுகின்றார்: நீங்கள் மறைமுகமாக இருப்பது போன்றே, நானும் மறைமுகமான முறையில் இங்கு வரவேண்டி உள்ளது. நான் கருப்பைச் சிறையில் பிரவேசிப்பதில்லை. சிவன் என்ற ஒரு பெயரே எனக்குத் தொடர்ந்தும் உள்ளது. நான் இச்சரீரத்தினுள் பிரவேசிக்கும் பொழுதும் எனது பெயர் மாறுவதில்லை. இவரின் சரீரத்தின் பெயர் மாறுகின்றது. சகல ஆத்மாக்களினதும் தந்தையான நான் எப்பொழுதும் சிவன் என்றே அழைக்கப்படுகிறேன். இச்சரீரங்களிலுள்ள ஆத்மாக்களாகிய நீங்கள் மறைமுகமானவர்கள். நீங்கள் உங்களின் சரீரங்கள் மூலமாகவே செயல்களைச் செய்கின்றீர்கள். நானும் மறைமுகமானவர். ஓர் ஆத்மா சரீரத்தினால் மூடப்பட்டிருக்கின்றார் என்ற ஞானத்தைக் குழந்தைகளாகிய நீங்கள் இப்பொழுது பெறுகின்றீர்கள். ஆத்மா மறைமுகமானவர், சரீரம் புலப்படக் கூடியது (இனங்காணக் கூடியது). நான் சரீரமற்றவர். மறைமுகமான தந்தை இச்சரீரத்தின் மூலம் உங்களுக்கு இந்த ஞானத்தைக் கூறுகின்றார். நீங்களும் மறைமுகமானவர்களே, நீங்கள் உங்களின் சரீரங்கள் மூலம்

செவிமடுக்கின்றீர்கள். பாரதத்தை ஏழ்மையில் இருந்து செல்வம் மிக்கதாக ஆக்குவதற்காக பாபா மீண்டும் ஒருமுறை வந்துவிட்டார் என்பதை நீங்கள் புரிந்து கொள்கின்றீர்கள். 'எங்கள் பாரதம்' என நீங்கள் கூறுகின்றீர்கள். ஒவ்வொருவரும் தமது பிரதேசத்தைக் குறிப்பிடும் பொழுது, 'எங்கள் குஜராத் அல்லது எங்கள் இராஜஸ்தான்' என்றே கூறுகின்றனர். "எனது" எனக் கூறப்படும் பொழுது பற்று உள்ளது. தங்களுடைய பாரதம் ஏழ்மையானது என அனைவரும் நம்புகின்றனர். ஆனால், தங்களுடைய பாரதம் எப்பொழுது செல்வம் மிக்கதாக இருந்தது என்றோ அல்லது எவ்வாறு அது அப்படி ஆகியது என்றோ எவரும் அறியார். குழந்தைகளாகிய நீங்கள் பெருமளவு போதையைக் கொண்டுள்ளீர்கள். எங்களுடைய பாரதம் மிகவும் செல்வம் மிக்கதாக இருந்தது. அங்கு துன்பம் என்ற கேள்விக்கு இடமில்லை. சத்தியயுகத்தில் வேறெந்தச் சமயங்களும் இருக்கவில்லை. அங்கு ஒரேயொரு தேவ தர்மம் மாத்திரமே இருந்தது என்பதை எவரும் அறியார். உலக வரலாறையும், புவியியலையும் எவருமே அறியார். இப்பொழுது நீங்கள் அனைத்தையும் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்கின்றீர்கள். எங்களின் பாரதம் மிகவும் செல்வம் மிக்கதாக இருந்தது, அது இப்பொழுது மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளது. அதை மீண்டும் ஒருதடவை செல்வம் மிக்கதாக ஆக்குவதற்காகத் தந்தை இப்பொழுது வந்திருக்கின்றார். சத்திய யுகத்தில் தேவர்களின் இராச்சியம் இருந்த பொழுது, பாரதம் அதி செல்வம் மிக்கதாக இருந்தது. அந்த இராச்சியம் எங்கு சென்று விட்டது? எவருக்கும் தெரியாது. ரிஷிகளும், முனிவர்களும் தங்களுக்குப் படைப்பவரையோ, படைப்பையோ தெரியாது எனக் கூறுவதுண்டு. தந்தை கூறுகின்றார்: சத்திய யுகத்திலுள்ள தேவர்களும் படைப்பவரினதோ, படைப்பின் ஆரம்பம், மத்தி, இறுதியினதோ ஞானத்தைக் கொண்டிருப்பதில்லை. தாங்கள் ஏணியில் கீழிறங்கி, கலியுகத்திற்குச் செல்ல வேண்டும் என அறிந்திருந்தால், அந்த இராச்சியத்தின் சந்தோஷத்தை அவர்கள் கொண்டிருக்க மாட்டார்கள், ஏனெனில் அவர்கள் அதனையிட்டுக் கவலை அடைந்திருப்பார்கள். நீங்கள் இப்பொழுது, முன்னரைப் போன்று மீண்டும் ஒருமுறை எவ்வாறு சதோபிரதான் ஆகுவது என்ற அக்கறையைக் கொண்டிருக்கின்றீர்கள். ஆத்மாக்களாகிய நீங்கள் எவ்வாறு அசரீரி உலகில் வசிக்கின்றீர்கள், பின்னர் எவ்வாறு கீழிறங்கிச் சந்தோஷ தாமத்திற்கு வருகின்றீர்கள் என்ற ஞானத்தையும் கொண்டிருக்கின்றீர்கள். நாங்கள் இப்பொழுது ஏறும் ஸ்திதியில் இருக்கின்றோம். இது 84 பிறவிகளின் ஏணியாகும். நாடகத்தின்படி, ஒவ்வொரு நடிகரும் வரிசைக்கிரமமாகக் கீழிறங்கி, தனது பாகத்தைத் தனக்குரிய நேரத்தில் நடிப்பார். ஏழைகளின் பிரபு யார் என்பதைக் குழந்தைகளாகிய நீங்கள் இப்பொழுது புரிந்து கொள்கின்றீர்கள். உலகத்திற்கு இது தெரியாது. இறுதியில் பக்தர்கள் அனைவரும் காத்திருந்த அந்த நாளும் வந்துவிட்டது என்ற பாடலையும் நீங்கள் கேட்டீர்கள். எப்பொழுது கடவுள் வந்து, பக்தர்கள் அனைவரையும் பக்தி மார்க்கத்தில் இருந்து விடுவித்து, அவர்களை சற்கதிக்குள் அழைத்துச் செல்கின்றார் என்பதை நீங்கள் இப்பொழுது புரிந்து கொண்டுள்ளீர்கள். பாபா மீண்டும் ஒருமுறை இச்சரீரத்தினுள் வந்திருக்கின்றார். மக்கள் சிவனின் பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றனர். எனவே, அவர் நிச்சயமாக வருகின்றார். அவர் ஸ்ரீகிருஷ்ணரின் சரீரத்தினுள் பிரவேசிப்பதாகக் கூற முடியாது; இல்லை. தந்தை கூறுகின்றார்: ஸ்ரீகிருஷ்ணரின் ஆத்மா 84 பிறவிகள் எடுத்துள்ளார். இதுவே அவரது பல பிறவிகளின் இறுதிப் பிறவி. முதலாம் இலக்கத்தவராக இருந்தவர், இப்பொழுது

தனது இறுதிப் பிறவியில் உள்ளார். அது உங்களுக்கும் பொருந்துகின்றது. நான் ஒரு சாதாரண சரீரத்தில் பிரவேசிக்கின்றேன். எவ்வாறு நீங்கள் 84 பிறவிகளை அனுபவம் செய்துள்ளீர்கள் என்பதை நான் வந்து, உங்களுக்குக் கூறுகின்றேன். அசரீரியானவரே தந்தையாகிய பரமாத்மாவான பரமதந்தை என்றும், அவர் உண்மையிலேயே மனிதர்களைத் தேவர்களாக மாற்றுகின்றார் என்றும் சீக்கியர்கள் நம்புகின்றனர். எனவே, நாங்கள் ஏன் தேவர்கள் ஆகக்கூடாது? தேவர்கள் ஆகியவர்கள் அவரைப் (பாபாவை) பற்றிக் கொள்வார்கள். தாங்கள் தேவ தர்மத்திற்கு உரியவர்களாக இருந்ததை எந்தவொரு நபரேனும் நம்புவதில்லை. ஏனைய சமயங்களின் வரலாறு மிகவும் குறுகியது. சிலவற்றிற்கு அது 500 வருடங்களும், ஏனையவற்றிற்கு அது 1250 வருடங்களும் ஆகும். உங்களின் வரலாறு 5000 வருடங்கள் ஆகும். தேவ தர்மத்திற்கு உரியவர்களாக இருந்தவர்கள் மாத்திரமே சுவர்க்கத்திற்குச் செல்வார்கள். ஏனைய சமயங்கள் அனைத்தும் பின்னரே வருகின்றன. நாடகத்தின்படி, தேவ தர்மத்திற்கு உரியவர்களாக இருந்தவர்கள், இப்பொழுது ஏனைய சமயங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். அவர்கள் மீண்டும் அதேபோன்று மாற்றப்பட்டு, தங்களின் ஆதி தர்மத்திற்குத் திரும்புவார்கள். தந்தை விளங்கப்படுத்துகின்றார்: குழந்தைகளே, நீங்கள் உலக அதிபதிகளாக இருந்தீர்கள். பாபாவே சுவர்க்கத்தை ஸ்தாபிப்பவர் என்பதையும் நீங்கள் புரிந்து கொள்கின்றீர்கள். எனவே, நாங்கள் ஏன் சுவர்க்கத்தில் இருக்க மாட்டோம்? நாங்கள் நிச்சயமாக எங்கள் ஆஸ்தியைத் தந்தையிடம் இருந்து கோருவோம். அந்நபர் எங்களின் தர்மத்திற்கு உரியவர் என்பதையே இது நிரூபிக்கின்றது. இவ்விடத்திற்குச் சொந்தம் இல்லாதவர்கள் இங்கு வரவும் மாட்டார்கள். அவர்கள் கூறுவார்கள்: நாங்கள் ஏன் இன்னுமொரு சமயத்திற்குள் செல்ல வேண்டும்? புதிய உலகில் சத்திய யுகத்துத் தேவர்கள் பெருமளவு சந்தோஷத்தைக் கொண்டிருந்தார்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்கின்றீர்கள்; அவர்கள் தங்க மாளிகைகளைக் கொண்டிருந்தார்கள். சோமநாதர் ஆலயத்தில் பெருமளவு தங்கம் இருந்தது. அதனைப் போன்ற ஒன்று வேறெந்தச் சமயத்திலும் இல்லை. சோமநாதர் ஆலயத்தைப் போல் ஆடம்பரமான ஆலயம் வேறெதுவும் கிடையாது. அங்கு ஏராளமான வைரங்களும், இரத்தினங்களும் இருந்தன. புத்தர் போன்ற எவரும் வைரங்களும், இரத்தினங்களும் பதிக்கப்பட்ட மாளிகைகளைக் கொண்டிருக்க மாட்டார்கள். குழந்தைகளான உங்களை மிக மேன்மையானவர்கள் ஆக்கிய தந்தைக்கு நீங்கள் எந்தளவில் கௌரவம் அளிக்கின்றீர்கள்? கௌரவம் எப்பொழுதும் பேணப்பட வேண்டும். தாங்கள் கடந்த காலத்தில் நற்செயல்கள் செய்திருப்பதாக அவர்கள் நம்புகின்றனர். தூய்மையாக்குபவரான தந்தை மாத்திரமே அனைத்திலும் அதிசிறந்த செயலைச் செய்கின்றார் என்பதை நீங்கள் இப்பொழுது புரிந்து கொள்கின்றீர்கள். எல்லையற்ற தந்தை வந்து, அனைத்திலும் அதிமேன்மையான சேவையைச் செய்கின்றார் என ஆத்மாக்களாகிய நீங்கள் கூறுகின்றீர்கள். அவர் எங்களை ஏழைகளில் இருந்து செல்வந்தர்களாகவும், யாசகர்களில் இருந்து இளவரசர்களாகவும் ஆக்குகின்றார். பாரதத்தைச் சுவர்க்கம் ஆக்கியவரை இப்பொழுது எவருமே கௌரவிப்பதில்லை. அனைத்திலும் அதிமேலான ஆலயம் என நினைவுகூரப்பட்ட ஆலயம் கொள்ளை இடப்பட்டதை நீங்கள் புரிந்து கொள்கின்றீர்கள். இலக்ஷ்மி நாராயணனின் ஆலயத்தை என்றுமே எவருமே கொள்ளை இடுவதில்லை. அவர்கள் சோமநாதர் ஆலயத்தையே கொள்ளை இட்டார்கள். பக்தி மார்க்கத்திலும் பல செல்வந்தர்கள் உள்ளனர். அரசர்களும்

வரிசைக்கிரமம் ஆனவர்களே. தாழ்ந்த அந்தஸ்தில் உள்ளவர்கள் உயர்ந்த அந்தஸ்தில் உள்ளவர்களுக்கு மரியாதை செலுத்துகின்றனர். அவர்கள் சபையில் வரிசைக்கிரமமாகவே அமர்கிறார்கள். பாபா அனுபவசாலி. இங்குள்ள அரண்மனைகள் தூய்மையற்ற அரசர்களைக் கொண்டவை. தூய அரசர்களின் சபைகள் எவ்வாறு இருக்கும்? அவர்களிடம் அதிகளவு செல்வம் இருப்பதால், அவர்களின் வீடுகளும் மிகவும் சிறந்தவையாகவே இருக்கும். தந்தையே உங்களுக்குக் கற்பிக்கின்றார் என்பதை நீங்கள் இப்பொழுது புரிந்து கொள்கின்றீர்கள். அவர் சுவர்க்கத்தின் ஸ்தாபனையை மேற்கொள்கின்றார். நாங்கள் சுவர்க்கத்தின் சக்கரவர்த்திகளாகவும், சக்கரவர்த்தினிகளாகவும் ஆகுகின்றோம். பின்னர், கீழிறங்கி வரும்பொழுது, நாங்கள் பக்தர்கள் ஆகுவோம். நாங்கள் முதலில் சிவனை வழிபடுபவர்கள் ஆகுவோம்; எங்களைச் சுவர்க்க அதிபதிகள் ஆக்கியவரை நாங்கள் வழிபடுவோம். அவர் எங்களை மிகவும் செல்வந்தர்கள் ஆக்குகின்றார். பாரதம் இப்பொழுது மிகவும் ஏழையாக உள்ளது. 500 ரூபாய் பெறுமதியான நிலம், இப்பொழுது 5000 ரூபாய்களுக்கு மேல் மதிப்பிடப்படுகின்றது. இவ்விலைகள் யாவும் போலியானவை. அங்குள்ள நிலங்களுக்கு விலைமதிப்பே கிடையாது. எவரும் தனக்கு வேண்டியளவு நிலத்தை எடுத்துக் கொள்ளலாம். அங்கு ஏராளமான நிலப்பகுதி இருக்கும். இனிய நீருள்ள ஆற்றங்கரைகளில் மாளிகைகள் இருக்கும். அங்கு வெகுசில மனிதர்களே இருப்பார்கள், இயற்கை உங்களின் சேவகனாக இருக்கும். அங்கு மிகச் சிறந்த பழங்களும், மலர்களும் இருக்கும். தற்பொழுது, அவர்கள் பெருமளவு முயற்சி செய்ய வேண்டியுள்ளது, ஆனால் அவ்வாறிருந்தும், உங்களிடம் போதுமானளவு தானியம் இல்லை. மனிதர்கள் பசியாலும், தாகத்தாலும் மரணிக்கின்றனர். நீங்கள் பாடலைச் செவிமடுக்கும் பொழுது, உங்களுக்குப் புல்லரிக்க வேண்டும். தந்தையே ஏழைகளின் பிரபு எனப்படுகின்றார். “ஏழைகளின் பிரபு” என்பதன் அர்த்தத்தை நீங்கள் புரிந்து கொள்கின்றீர்கள். அவர் யாரைச் செல்வந்தர் ஆக்குகின்றார்? அவர் நிச்சயமாகத் தான் வருகின்ற இடத்து மக்களையே செல்வந்தர்கள் ஆக்குவார். தூய்மையானவர்களில் இருந்து தூய்மை அற்றவர்கள் ஆகுவதற்கு உங்களுக்கு 5000 வருடங்கள் எடுக்கின்றன என்பதைக் குழந்தைகளான நீங்கள் அறிவீர்கள். பாபா இப்பொழுது உடனடியாகவே உங்களைத் தூய்மை அற்றவர்களில் இருந்து தூய்மை ஆக்குகின்றார். அவர் உங்களை அதிமேன்மையானவர்கள் ஆக்குகின்றார். நீங்கள் ஒரு விநாடியில் ஜீவன்முக்தியைப் பெறுகின்றீர்கள். நீங்கள் கூறுகின்றீர்கள்: பாபா, நான் உங்களுக்கு உரியவர். தந்தை கூறுகின்றார்: குழந்தைகளே, நீங்கள் உலக அதிபதிகள். ஒரு புத்திரன் பிறந்தவுடனேயே ஒரு வாரிசு ஆகுகின்றார். அவர்கள் அதிகளவு சந்தோஷம் அடைகின்றனர். பிறந்திருக்கும் குழந்தை ஒரு பெண்ணாக இருப்பதைப் பார்த்தால் அவர்களின் முகங்கள் வெளிறிப் போய் விடுகின்றன. இங்கு, சகல ஆத்மாக்களும் புத்திரர்களே. 5000 வருடங்களுக்கு முன்னர் நீங்கள் சுவர்க்க அதிபதிகளாக இருந்ததை இப்பொழுது புரிந்து கொள்கின்றீர்கள். பாபாவே உங்களை அவ்வாறு ஆக்கினார். மக்கள் சிவனின் பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றனர், ஆனால் பாபா எப்பொழுது வந்தார் என்பதை அவர்கள் அறியார்கள். இலக்ஷ்மி நாராயணனின் இராச்சியம் எப்பொழுது இருந்தது என்பதையும் அவர்கள் அறியார்கள். அவர்கள் அவரின் பிறந்ததினத்தைக் கொண்டாடுவதுடன், சிவலிங்கங்களுடன் கூடிய பெரிய ஆலயங்களையும் கட்டுகின்றனர். ஆனால் அவர் எப்பொழுது வந்தார் என்பதையோ, அவர் வந்தபொழுது என்ன செய்தார்

என்பதையோ அவர்கள் அறியார்கள்; அவர்களுக்கு எதுவுமே தெரியாது. அது குருட்டு நம்பிக்கை எனப்படுகின்றது. தங்களின் தர்மம் என்னவென்றோ, அது எப்பொழுது ஸ்தாபிக்கப்பட்டது என்றோ அவர்களுக்குத் தெரியாது. ஏனைய சமயத்தவர்கள் அனைவருக்கும் புத்தர் போன்றோர் வந்த நேரம், திகதி என்பன தெரியும். சிவபாபாவிற்கோ அல்லது இலக்ஷ்மி நாராயணனுக்கோ நேரமோ, திகதியோ கிடையாது. 5000 வருடங்களை மாத்திரமே கொண்ட ஒன்றிற்கு அவர்கள் நூறாயிரக்கணக்கான வருட கால எல்லையைக் கொடுத்துள்ளனர். நூறாயிரக்கணக்கான வருடங்களுக்குரிய எதையும் எவரால் நினைவில் வைத்திருக்க முடியும்? பாரதத்தில் எப்பொழுது தேவ தர்மம் இருந்தது என்பதை அவர்கள் புரிந்து கொள்வதில்லை. அது நூறாயிரக்கணக்கான வருடங்களாக இருந்திருந்தால், பாரதத்தின் சனத்தொகையே மிகவும் பெரியதாக இருந்திருக்கும். பாரத பூமியும் அதிபெரியதாக இருந்திருக்கும். நூறாயிரக்கணக்கான வருடங்களில் எண்ணற்ற மக்கள் இருந்திருப்பார்கள். எவ்வாறாயினும், அந்தளவு தொகை இல்லை. உண்மையில், அவர்கள் (அந்தத் தர்மத்தில்) எண்ணிக்கையில் மேலும் குறைந்தளவினர் ஆகிவிட்டார்கள். தந்தை இங்கே அமர்ந்திருந்து இவ்விடயங்கள் அனைத்தையும் விளங்கப்படுத்துகின்றார். மக்கள் இவற்றைக் கேள்விப்படும் பொழுது, தாங்கள் முன்னர் ஒருபொழுதும் இவற்றைக் கேள்விப்பட்டதில்லை என்றோ அல்லது சமயநூல்களில் அவற்றை ஒருபொழுதும் வாசித்ததில்லை என்றோ கூறுகின்றனர். இவை அற்புதமான விடயங்கள்! முழுச் சக்கரத்தினதும் ஞானம் இப்பொழுது குழந்தைகளாகிய உங்களின் புத்தியில் உள்ளது. இப்பொழுது, இவ்வாத்மா தனது பல பிறவிகளின் இறுதிப் பிறவியில் தூய்மையற்றவராக உள்ளார். சதோபிரதானாக இருந்தவர் இப்பொழுது தமோபிரதான் ஆகிவிட்டார், அவர் மீண்டும் சதோபிரதான் ஆகவேண்டும். ஆத்மாக்களாகிய உங்களுக்கு இப்பொழுது கற்பித்தல்கள் வழங்கப்படுகின்றன. ஆத்மாக்களான நீங்கள் காதுகளால் செவிமடுக்கும் பொழுது, சரீரங்கள் அசைகின்றன. உண்மையில், ஆத்மாக்களான நாங்கள் 84 பிறவிகளை எடுக்கின்றோம். 84 பிறவிகளில், நாங்கள் நிச்சயமாக 84 பெற்றோரைக் கொண்டிருந்திருப்போம். இந்தக் கணக்கு உள்ளது. நீங்கள் 84 பிறவிகள் எடுக்கின்றீர்கள் என்பதும், குறைந்த பிறவிகளை எடுப்பவர்களும் உள்ளனர் என்பதும் உங்களின் புத்தியில் புகுகின்றன. அனைவரும் 84 பிறவிகள் எடுப்பார்கள் என்றில்லை. தந்தை இங்கிருந்தவாறு சமயநூல்களில் எழுதப்பட்டுள்ள விடயங்களை விளங்கப்படுத்துகின்றார். உங்களைப் பற்றிப் பேசும் பொழுது குறைந்தபட்சம் 8.4 மில்லியன் பிறவிகள் எடுக்கின்றீர்கள் என்றாவது கூறுகின்றார்கள், ஆனால் என்னை எண்ணற்ற, முடிவிலி எண்ணிக்கையான பிறவிகள் எடுப்பதாக அல்லவா கூறுகின்றார்கள். அவர்கள் என்னை ஒவ்வொரு துணிக்கையிலும், கூழாங்கற்களிலும், கற்களிலும் இட்டு விட்டார்கள். அவர்கள் கூறுகின்றனர்: நான் எங்கே பார்த்தாலும் உங்களை மாத்திரமே பார்க்கின்றேன். நான் எங்கும் ஸ்ரீகிருஷ்ணரை மாத்திரமே பார்க்கின்றேன். மதுரையிலும், பிருந்தாவனத்திலும் (ஸ்ரீகிருஷ்ணரின் இடங்கள்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றனர். அவர்கள் ஸ்ரீகிருஷ்ணரைச் சர்வவியாபகர் எனக் கூறுகின்றனர். இராதையின் குலத்திற்கு உரியவர்கள், தாங்கள் எங்கும் இராதையை மாத்திரமே பார்ப்பதாகக் கூறுகின்றனர். “நீங்களும் இராதை, நானும் இராதை.” எனவே, ஒரேயொரு தந்தை மாத்திரமே உண்மையில் ஏழைகளின் பிரபு. அனைத்திலும் அதிசெல்வந்த தேசமாக இருந்த பாரதமே இப்பொழுது அனைத்திலும் அதி

ஏழ்மையாகி விட்டது. இதனாலேயே நான் பாரதத்திற்கு வர வேண்டியுள்ளது. இந்நாடகம் ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டது. அதில் சற்றேனும் வேறுபாடு இருக்க முடியாது. படமாக்கப்பட்ட நாடகம் மீண்டும் மீண்டும் அதேபோன்று இடம்பெறும்; இதில் சிறிதளவு வேறுபாடேனும் இருக்க முடியாது. நீங்கள் நாடகத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். நாடகம் என்றால் நாடகம்தான்! அந்நாடகங்கள் எல்லைக்கு உட்பட்டவை, இந்நாடகமோ எல்லையற்றது. இந்த எல்லையற்ற நாடகத்தின் ஆரம்பம், மத்தி, இறுதி பற்றி எவருமே அறியார். ஸ்ரீகிருஷ்ணரை அன்றி, அசரீரியான கடவுளையே அவர்கள் ஏழைகளின் பிரபு என் நம்புகிறார்கள். ஸ்ரீகிருஷ்ணர் சத்திய யுகத்தின் செல்வந்த இளவரசராக இருந்தார். கடவுளுக்கெனச் சொந்தமாக ஒரு சரீரம் கிடையாது. அவர் வந்து, குழந்தைகளாகிய உங்களைச் செல்வந்தர்கள் ஆக்குகின்றார். அவர் உங்களுக்கு இராஜயோகக் கற்பித்தல்களைக் கொடுக்கின்றார். நீங்கள் உங்களின் கல்வி மூலம் சட்டநிபுணர்கள் போன்றோராகி, பின்னர் ஒரு வருமானத்தைச் சம்பாதிக்கின்றீர்கள். தந்தையும் இப்பொழுது உங்களுக்குக் கற்பிக்கின்றார். எதிர்காலத்தில் நீங்கள் சாதாரண மனிதர்களில் இருந்து நாராயணன் ஆகுவீர்கள். நீங்கள் பிறவி எடுப்பீர்கள்; சத்தியயுகம் கடலிலிருந்து தோன்றுகின்றது என்றில்லை. ஸ்ரீகிருஷ்ணரும் பிறவி எடுத்தார். அந்நேரத்தில் கம்சன் போன்றோரின் தேசம் இருக்கவில்லை. “ஸ்ரீகிருஷ்ணர்” எனும் பெயர் அதிகளவில் நினைவு கூரப்படுகின்றது! அவரின் தந்தை நினைவு செய்யப்படுவதில்லை. அவரது தந்தை எங்கே? ஸ்ரீகிருஷ்ணர் நிச்சயமாக எவரோ ஒருவரின் குழந்தையாக இருப்பார். ஸ்ரீகிருஷ்ணர் பிறவி எடுக்கும் பொழுது, ஒரு சில தூய்மையற்ற மனிதர்களும் இருக்கின்றார்கள். அவர்கள் அனைவரும் முழுமையாக மரணித்த பின்னர், அவர் சிம்மாசனத்தில் அமர்ந்து, தனது இராச்சியத்தைப் பெறுகின்றார். அந்நேரத்தில் இருந்தே அவரது யுகம் ஆரம்பிக்கின்றது. அந்த யுகம் இலக்ஷ்மி, நாராயணனுடன் ஆரம்பம் ஆகுகின்றது. சக்கரத்தின் காலப்பகுதி அந்தளவு நீண்டதாக இருக்க முடியாது என்பதை மக்கள் புரிந்து கொள்ளும் வகையில், எவ்வாறு இவரின் இராச்சியம் இவ்வளவு காலத்திற்கு நீடிக்கின்றது, அவரின் இராச்சியம் அந்தளவு காலத்திற்கு நீடிக்கின்றது என்ற முழுக் கணக்கையும் நீங்கள் எழுதுகின்றீர்கள். 5000 வருடங்களின் முழுமையான கணக்கும் உள்ளது. இது குழந்தைகளாகிய உங்களின் புத்தியில் புகுகின்றது. நேற்று, நாங்கள் சுவர்க்கத்தின் அதிபதிகளாக இருந்தோம். தந்தையே எங்களை அவ்வாறு ஆக்கினார். அதனாலேயே அவரது பிறந்த தினமாகிய, சிவ ஜெயந்தி கொண்டாடப்படுகின்றது. உங்களுக்கு அனைவரையும் தெரியும். கிறிஸ்து, குரு நானக் போன்றோர் மீண்டும் எப்பொழுது வருவார்கள் என்ற ஞானத்தை நீங்கள் கொண்டிருக்கின்றீர்கள். உலக வரலாறும், புவியியலும் அதேவிதமாக மீண்டும் மீண்டும் நிகழ்கின்றன. இக்கல்வி மிக இலகுவானது. நீங்கள் சுவர்க்கம் பற்றி அறிவீர்கள். உண்மையில் பாரதம் சுவர்க்கமாகவே இருந்தது. பாரதம் அழிவற்ற பூமியாகும். பாரதத்திற்கு உள்ள புகழ் வேறு எவ்விடத்திற்கும் இருக்க முடியாது. ஒரேயொரு தந்தை மாத்திரமே தூய்மை அற்றவர்கள் அனைவரையும் தூய்மை ஆக்குகின்றார். அச்சா.

இனிமையிலும் இனிமையான, அன்புக்குரிய, எப்போதோ தொலைந்து இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளுக்கு உங்கள் தாய், தந்தையாக இருக்கும் பாப்தாதாவின் அன்பும் நினைவுகளும் காலை வந்தனங்களும்.

ஆன்மீகத் தந்தை ஆன்மீகக் குழந்தைகளுக்கு நமஸ்தே சொல்கிறார்.

தாரணைக்கான சாராம்சம்:

1. உங்கள் புத்தியில் நாடகத்தின் ஆரம்பம், மத்தி, இறுதி பற்றிய ஞானத்தைக் கொண்டிருந்து, அனைத்துக் கவலைகளையும் துறவுங்கள். சதோபிரதான் ஆகுகின்ற அக்கறையை மாத்திரம் கொண்டிருங்கள்.
2. ஏழைகளின் பிரபுவான பாபா பாரதத்தை ஏழ்மையானதில் இருந்து செல்வம் மிக்கதாக்க வந்திருக்கின்றார். அவரின் முழுமையான உதவியாளர் ஆகுங்கள். உங்களின் புதிய உலகை நினைவுசெய்து, சதா சந்தோஷமாக இருங்கள்.

ஆசீர்வாதம்: ஒரேயொரு இராமரை உங்கள் இதயத்தில் வைத்திருந்து, உண்மையான சேவையை செய்வதன் மூலம் மாயையை வெற்றி கொண்டவர் ஆகுவீர்களாக.

அனுமனை சதா சேவை செய்பவராகவும், தைரியமான வீரன் என்ற சிறப்பியல்புகளுடன் அவர்கள் காட்டி உள்ளார்கள். அதனாலேதான், தனது வாலால் முழு இலங்கையையும் அவர் எரித்த போதும், அவர் எரியவில்லை. இங்கேயும், சதா சேவை செய்பவர்களால் மாயையின் உரிமைகளை முடித்து விட முடியும். சேவை செய்யாதவர்களால் மாயையின் இராச்சியத்தை எரிக்க முடியாது. அனுமனது இதயத்தில் ஒரேயொரு இராமர் சதா வாழ்ந்தார். ஆகையால், உங்கள் இதயத்தில் ஒரேயொரு தந்தையை தவிர வேறு எவருமே இல்லாதிருக்கட்டும். உங்கள் சொந்த சரீரத்தின் விழிப்புணர்வையேனும் கொண்டிருக்காதீர்கள். அப்பொழுதே நீங்கள் மாயையை வெற்றி கொண்ட வெற்றியாளர் ஆகுவீர்கள்.

சுலோகம்: ஆத்மாவும் சரீரமும் இணைந்திருப்பதைப் போன்று, அவ்வாறாகவே தந்தையுடன் இணைந்திருங்கள்.

**---ஓம் சாந்தி---**

அவ்யக்த சமிக்ஞை: ஒற்றுமை மற்றும் நம்பிக்கை என்ற சிறப்பியல்பால், வெற்றி நிறைந்தவர் ஆகுங்கள்.

ஓர் ஒன்றுகூடலில் ஒவ்வொருவரின் சிறப்பியல்பையும் பாருங்கள், அவர்களின் சிறப்பியல்புகளை மாத்திரம் கிரகியுங்கள், அவர்களின் பலவீனங்களை அகற்றி, அந்த ஒன்றுகூடலில் ஒற்றுமை பலப்பட முயற்சி செய்யுங்கள். உங்கள் விழித்தெழுதல், அமர்தல், நடை ஒரே மாதிரியாக இருப்பதைப் போன்றும், நீங்கள் அனைவரும் ஒரே விடயத்தைப் பற்றியே பேசுவதைப் போன்றும், ஒரே முறையிலும் ஒரே நெறிமுறையிலும் ஒரே சற்கதியை அடைகிறீர்கள். அவ்வாறாகவே உங்கள் சம்ஸ்காரங்களும் ஒரேமாதிரியாக இருக்க வேண்டும். வேற்றுமை இருந்த போதிலும், ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை கொண்டிருந்து, ஒருவர் மற்றவரின் அபிப்பிராயங்களுக்கு மதிப்பு அளியுங்கள். இதுவே ஒற்றுமைக்கான அடிப்படை ஆகும்.